# சமூகபரிபாலன பஞ்சாயத்துசபை

எண்:2, திருவீதி அம்மன் கோயில் தெரு, வேளச்சேரி, சென்னை - 42

சி.தியாகராஜன்
தலைவர்
9841239867

பி.சற்குணதாஸ்
செயலாளர்
9884896128

இரா.சூரியமோகன்
பொருளாளர்
9551142495

தேதி :..........................

நாள் 26.12.2019

பெறுநர் :-

நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர் அவர்கள்,
தென் சென்னை தொகுதி,
தமிழ்நாடு,

**மதிப்பிற்குரிய மக்களவை உறுப்பினர் அவர்களுக்கு வணக்கம்!**

பொருள் :- சென்னை ஐ.ஐ.டி மெட்ராஸ் வளாகத்தில் கடந்த 60 வருடங்களாக பொது மக்களின் உபயோகத்தில் இருந்த நுழைவு வாயில் (கிருஷ்ணா ஹாஸ்டல் கேட்) முன் அறிவிப்பின்றி இரவோடு இராவாக மூடியதால் பள்ளி மாணவர்கள், ஐ.ஐ.டி ஊழியர்கள், ஓய்வு பெற்ற ஊழியர்கள் ஒப்பந்த ஊழியர்கள் அருகில் குடியிருக்கும் Ph.D மாணவர்கள் நலனை கருத்தில் கொண்டு ஐ.ஐ.டி நிர்வாகத்திடம் பேசி நுழைவு வாயிலை உடனே திறந்திட நடவடிக்கை எடுக்க கோரும் விண்ணப்பம்.

................

கடந்த 60 வருடங்களுக்கு முன் மெட்ராஸ் ஐ.ஐ.டி அமைவதற்கு வேளச்சேரி மற்றும் தரமணி பூர்வீகமாக குடியிருந்த வீட்டுமனையை சுமார் 200 குடும்பங்கள் அரசு வேண்டுகோளுக்கு இணங்க வாழ்ந்து வந்த நிலங்களை கல்வி நிறுவனத்திற்கு விட்டுக்கொடுத்துள்ளார்கள். அப்போது பேச்சு வார்த்தையில் பல உறுதிமொழிகளை நிர்வாகம் கொடுத்து வேளச்சேரி, தரமணி மக்கள் வேலைவாய்ப்பு, மற்றும் கல்வி போன்றவைகளுக்கு (கிருஷ்ணா ஹாஸ்டல் கேட்) காந்தி சாலை நுழைவு வாயிலை கடந்த 60 வருடங்களாக பயன்படுத்தி வந்தார்கள்.

24.12.2019 அன்று திடீரென்று இரவோடு இராவாக முன் அறிவிப்பின்றி காந்தி சாலை நுழைவு வாயிலை மூடிவிட்டார்கள். இதனால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள்

1. ஐ.ஐ.டி வளாகத்தில் உள்ள சென்ட்ரல் ஸ்கூல் வனவாணி மெட்ரிக் பள்ளிகளில் படிக்கும் வேளச்சேரியிலிருந்து செல்லும் மாணவர்கள் தடுக்கப்படுகிறார்கள். மாணவர்கள் 4 கி.மீட்டர் சுற்றி செல்ல வேண்டியுள்ளது.

Scanned by CamScanner

# சமூகபரிபாலன பஞ்சாயத்துசபை

எண்:2, திருவீதி அம்மன் கோயில் தெரு, வேளச்சேரி, சென்னை - 42

சி.தியாகராஜன்
தலைவர்
9841239867

பி.சற்குணதாஸ்
செயலாளர்
9884896128

இரா.சூரியமோகன்
பொருளாளர்
9551142495

தேதி :..........................

2. வேளச்சேரியிலிருந்து செல்லும் ஐ.ஐ.டி யில் பணிபுரியும் நிரந்தர மற்றும் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்படுறார்கள்.

3. வேளச்சேரியில் வசிக்கும் ஐ.ஐ.டி யில் பணிபுரியும் ஒப்பந்த தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்படுறார்கள்.

4. வேளச்சேரியில் வசிக்கும் ஓய்வு பெற்ற ஐ.ஐ.டி தொழிலாளர்கள் ஐ.ஐ.டி மருத்துவமனைக்கு செல்வது தடுக்கப்படுகிறது.

5. மூடிய நுழைவு வாயிலின் அருகில் கடைகள் வைத்திருக்கும் வியாபாரிகள் கடைகளை மூட வேண்டிய சூழ்நிலையால் பாதிக்கப்படுகிறார்கள்.

ஐ.ஐ.டி. மெட்ராஸ் வளாகம் அமைக்கும் போது அருகில் உள்ள பொதுமக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை 60 வருடங்களுக்குப் பின் மறுக்கப்பட்டுள்ளது.

பொது மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க நுழைவு வாயிலை உடனடியாக திறக்க தாங்கள் தலையிட்டு தகுந்த நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமாறு தொகுதிமக்கள் என்கிற அடிப்படையில் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றியுடன்

தங்கள் உண்மையுள்ள,

சி.தியாகராஜன்
தலைவர்
சமூக பரிபாலன பஞ்சாயத்து சபை
எண்.2 திருவீதிஅம்மன் கோயில் தெரு,
வேளச்சேரி, சென்னை – 600 042.

பி.சற்குணதாஸ்
செயலாளர்
சமூக பரிபாலன பஞ்சாயத்து சபை
எண்.2 திருவீதிஅம்மன் கோயில் தெரு,
வேளச்சேரி, சென்னை – 600 042.

Scanned by CamScanner